**தலைப்பு 304 – வளி மண்டலவியல் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வளி மண்டலத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வளி மண்டலவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜுன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஜுலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வளி மண்டலவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனமு அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொங்கல ரேடார் முறைமை நிறுவுவதற்காக 2007 ஆண்டின் போது ரூபா 403 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த வேலைக்காக உலக வளிமண்டளவியல் சங்கத்தின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் வைப்புச் செய்திருந்த ரூபா 322 மில்லியன் தொகை மீண்டும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொண்டு அதில் ஒரு மில்லியன் தொகை செலவிடப்பட்டு மீதித் தொகை திறைசேரிக்கு அனுப்புதல் மற்றும் ரூபா 9 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் காணாமல் போயிருந்தமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | கிடைத்திருந்த பணத்தை பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்து விண்ணப்பித்திருந்த கட்டுநிதி கிடைக்காமையால் ரூபா ஒரு மில்லியன் தொகையை வைத்துக்கொண்டு மீதித் தொகையை திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. டொப்லர் ரேடார் முறைமைக்கு புதிய உபகரணங்கள் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருக்காமையால் பதிவழித்தல் மேற்கொள்ளப்படவில்லை. | திறைசேரியின் அறிவுரை மீது இந்த சொத்துக்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள ஏடுகளின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 10,876,363 தொகை மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 5,012,143 தொகை எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அவை முறையே ரூபா 9,956,153 தொகை மற்றும் ரூபா 4,100,933 தொகை என காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணவுப் பெறுவனவு என காட்டப்பட்டுள்ளவை நிதிக்கூற்றுக்களில் ACA5 இல் ஆண்டின் போது செலவு வைத்தவற்றின் கூட்டுத்தொகை மற்றும் ஆண்டின் போது வரவு வைத்தவற்றின் கூட்டுத்தொகை மற்றும் வரவு மீதி உச்ச எல்லையில் மறை மீதியினை சீராக்கல் செய்வதன் மூலமாகும். | முறைப்பிரகாரம் கணக்குப் பதிதல் வேண்டும். |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் கூட்டுத்தொகை முற்பணப் பதிவேட்டின் படி ரூபா 191,548 தொகை எனினும், கணக்குகளின் படி ரூபா 121,548 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 70,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சம்பள மென்பொருளின் படி சரியாக அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், $CC_{10}$ பதிவேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்டது என அறிவிக்கின்றேன். | இடர் மற்றும் விழா முற்பணம் மீதிகள் பதிவேடுகளில் மற்றும் நிதிக் கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்களின் படி நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரை ஆக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்துடன் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | $CC_{10}$ படிவம் மற்றும் அந்த படிவத்தின் அடிப்படையில் கடன் மற்றும் முற்பணப் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் $CC_{10}$ படிவத்தில் இந்த கடன் வகைகளையும் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | பொது நிதிச் சுற்றறிக்கையின் அறிவுரையின் படி $CC_{10}$ படிவத்தை அடிப்படையாக கொண்டு கடன் மற்றும் முற்பணப் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். |

**2 நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகளின் தேறிய ஏற்பாடுகளில் ரூபா 25,852,460 அதாவது 7.08 சதவீதம் பயன்படுத்தியிருக்கவில்லை. | செலவுகள் முற்றாக மேற்கொள்ளப்படாமை மற்றும் நிலவிய கொவிட் 19 நிலைமையின் கீழ் ஏற்பட்ட தாமதங்கள் பாதித்துள்ளன. | திறைசேரி ஏற்பாடுகளை செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) | 05 மீண்டுவரும் செலவு விடயங்களில் 21 சதவீதம் முதல் 51 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிலும், 05 மூலதனச் செலவு விடயங்களில் 35 சதவீதம் முதல் 89 சதவீத வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | கொவிட் தொற்றுநோய் காரணமாக எதிர்பார்த்த செலவுகள் ஏற்படாமை, ரேடியோஸொன்ட் உபகரணங்கள், கப்பலில் ஏற்றுவதில் தாமதம் மீண்டுவரும் செலவுகளின் சேமிப்புக்கு காரணமாக இருந்தது. தலைமை அலுவலகம் பதுளை மற்றும் நுவரஎலிய வளிமண்டளவியல் அலுவலக வளவுகளின் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் திணைக்களக் கட்டுப்பாட்டுக்கு புறம்பாக இருந்தமை. | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்கள புத்தகங்களின் படி 07 செலவு விடயங்களின் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,199,611 தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 பெப்ரவரி 12 நிதிக்கூற்றுக்களில் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பொறுப்புக்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டதுடன், அத்திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு முடியாமல் போனது. | ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1999 மற்றும் 2010 ஆண்டுகளின் போது சேவையை விட்டுச்சென்றிருந்த இரண்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 135,922 தொகை மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 54,868 தொகை 2020 மார்ச் 16 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | ரூபா 135,922 இற்கான கடன் மீதி பதிவழித்தல் தொடர்பாக அரச கணக்குத் திணைக்களத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் ஓய்வூதியக் கொடுப்பனவு பத்திரம் 2021 மார்ச் 16 திகதி வரை கணக்குப் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். | சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தரின் மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் கடன் மீதி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமில்லாத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396 | 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 41,212 தொகைக்கான 05 காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தொகை ரூபா 38,370 தொகை பெறுமதியான இரண்டு காசோலைகளுக்காக 2020 ஜூலை 30 திகதி மற்றும் 2020 ஜூலை 03 திகதி புதிய இரண்டு காசோலைகள் வழங்கப்பட்டது என அறிவிக்கின்றேன். | 06 மாதங்களை மிகைத்துள்ள காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 249,219 தொகைக்கான வைப்புக்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்புக்களில் ரூபா 70,000 தொகை பிணை வைப்புக்களாக காணப்பட்டதுடன் மீதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 1646 | 2016 ஆண்டு முதல் 07 வாகனங்களின் ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021 ஆண்டு முதல் மாதாந்த பொழிப்புக்கள் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மாதாந்தப் பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1982 இன் 04 ஆம் இலக்க நகர அதிகார சபையின் (திருத்திய) சட்டம் பிரிவு 28ஆ(2)(ஆ) இன் 8(ஓ) (i) | திணைக்களத்தின் முன்பக்க வேலி நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த மையால் காணியை அதிகார சபைக்கு உரித்தாக்கினால் நட்டஈடு ஏதும் | இந்த நிர்மாண வேலைக்காக வரைபுகள் தயாரித்தல், தேசிய கட்டட ஆய்வு அமைப்பின் பொறியியல் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. அங்கு கணியப்பட்டி வரைபு மற்றும் விலைகள் தொடர்பான அறிவுரைகள் | நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்திய) சட்டத்தின் உரிய அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஒன்று காணப்பட்டது. | கிடைக்கப் பெற்ற போதும் இந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக குறிப்பிடப் பட்டிருக்காமையால் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படவில்லை. | |
| (இ) 2016 திசெம்பர் 26 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 3.1 | மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சொந்தமான 09 வாகனங்களை எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | 2021 ஆண்டின் போது எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், நிலவும் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக அவ் விடயங்கள் மேற்கொள்வதில் வசதியின்மைகள் ஏற்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ii) பந்தி 4.4 | சுற்றறிக்கைக்கு முரணாக கொழும்பு மாநகர சபையின் எல்லையில் காணப்படும் வாகனங்களின் திருத்த வேலைகள் நகர எல்லைக்கு வெளியே அமைந்துள்ள நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள கராஜ்கள் மூலம் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.5 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 சந்தர்ப்பங்களில் செலவுகள் 20.13 சதவீதம் முதல் 283.14 சதவீதம் வரை வீச்சில் தேவையை விட மிகையாக வழங்கப்பட்டிருந்ததுடன், முற்பணம் பெறப்பட்ட கருமம் முடிந்தவுடன் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 07 சந்தர்ப்பங்களில் 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரை தாமதத்துடன் தீர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முற்பணங்கள் பெற்றுக்கொள்ளும் போது செலவுத் தொகையை தீர்மாணித்தல், அறுதியாக மதிப்பீடு செய்தல் நடைமுறையில் மேற்கொள்வது முடியாமையால் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. | தேவைக்கு ஏற்றளவு முற்பணங்கள் பெறல் மற்றும் தாமதம் இன்றி முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இயலுமை அபிவிருத்திக்காக பதவியணி பயிற்சி வழங்கலுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.37 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 0.63 மில்லியன் அதாவது 5 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. டொப்லர் வானிலை ரேடார் முறைமையை விரிவாக்கல் நிதி முன்னேற்றம் நூறு சதவீதமாக காணப்பட்ட போதிலும் பௌதீக முன்னேற்றம் 16 சதவீதமாக இருந்தது. மின்னலை இனங் காணும் முறைமைக்காக (lighthing detection system) ரூபா 2.20 மில்லியன் தொகை பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும் உண்மையான செலவு ரூபா 0.25 மில்லியன் தொகை அதாவது 11.36 சதவீதமாகும். | டொப்லர் ரேடார் முறைமைக்கான காலாண்டுக்கான செலவு அந்த காலாண்டுக்குள்ள ஏற்பாடுகள் என கணித்து 2020 ஆண்டிற்காக கணிக்கப்பட்டிருந்தது. கொரோனா தொற்றுநோய் காரணமாக ஜப்பான் தரப்பினரின் அலுவல்கள் செயற்பட்டிருக்காமையால் பௌதீக முன்னேற்றம் 16 சதவீதம் ஆகக் காணப்பட்டது. | ஏற்பாடுகளை பயன்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வளி மண்டலவியல் திணைக்களத்தின் முன்பக்க வேலி மற்றும் கடவை நிர்மாணிக்கும் போது கணிசமான அளவு குறைபாடுகள் ஏற்பட்டிருந்த போதிலும் இறுதி பில் பத்திரத்திற்காக ரூபா 3,277,459 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் படி கொடுப்பனவு செய்யப்பட்டது. | நிர்மாண வேலைகள் திட்டமிடப்பட்டவாறு முறைப்பிரகாரம் நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 ஜனவரி 25 திகதிய தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2(இ) இன் படி 2020 ஆண்டிற்காக விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | பொது நிதிச் சுற்றறிக்கையின் 01/2014 இன் படி பெறுகைத் திட்டம் தயாரித்தல் கட்டாயமாகும். அந்த கட்டாயமான பெறுகைத் திட்டம் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. பெறுகை வழிகாட்டல் கோவையில் காணப்படும் ஏனைய பெறுகைத் திட்டங்கள் தயாரித்தல் கட்டாயம் அல்ல என அறிவிக்கின்றேன். | விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பணிப்பாளரின் முறையான அங்கீகாரம் இன்றி ஓடியிருந்த வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து ஒன்று தொடர்பாக விசாரணை ஒன்று நடாத்தி 2020 ஜூலை 18 திகதி அறிக்கை ஒன்று வழங்கியிருந்த போதிலும், முறையான விசாரணை ஒன்று 2021 ஏப்ரல் அளவிலும் மேற்கொண்டிருக்கவில்லை. | 2020 மே 15 மற்றும் 17 ஆகிய இரண்டு நாட்களில் ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக விசாரணை அரசாங்க சேவை, மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றமையால் முறையான விசாரணை விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமை எங்கள் கட்டுப்பாட்டுக்கு புறம்பானதாகும். | வாகன ஓட்டம் தொடர்பாக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணைகள் முறைப்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீரற்ற காலநிலை தொடர்பாக முன்னறிவித்தல் வழங்கும் நடைமுறைக்கு உதவியாக டொப்லர் ரேடார் முறைமை புத்தளம் மற்றும் பொத்துவில் வளிமண்டல நிலையங்களில் நிறுவுவதற்கு ஜப்பான் சர்வதேச உதவி நிறுவனத்தின் மூலம் ஜப்பான் யென் 2,503 மில்லியன் வழங்குவதற்காக இணங்கியிருந்தது. அதற்காக 2017 ஜுன் 30 திகதி இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இது வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தில் நிர்மாண வேலைக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஒன்று ஏற்பட்டுள்ளது என காணப்பட்டிருந்தது. 2019 ஆண்டு முதல் விரைவாக செயற்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆண்டில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. எனினும், இரண்டு நாடுகளிலும் காணப்பட்ட கொரோனா நிலைமையின் காரணமாக ஜப்பானின் டொப்லர் இயந்திர உபகரணம் கொள்வனவு செய்வதற்காக விலைகூறல் அழைத்தல் 2021 ஆகஸ்ட் வரை காலம் எடுக்கும் என JICA நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | புத்தளம் மற்றும் பொத்துவில் ரேடார் முறைமைகளை தாமதம் இன்றி நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மினவாடா இணக்கத்தின் பிரகாரம் 2020 ஆண்டின் பின்னர் இரசம் அடங்கிய உற்பத்திகளின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யக்கூடாது என காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2020 ஜுலை 22 திகதி அளவிலும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் 23 அலுவலகங்களின் 139 இரச உபகரணங்களும் திணைக்களத்திற்கு உதவும் 33 வெளி நிலையங்களின் 264 இரச உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. | இரசம் அடங்கிய உபகரணங்கள் பயன்படுத்துவதை அகற்றுவதற்காக நாள் ஒன்று நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. | இரசம் பயன்பாடு படிப்படியாக குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டிற்கான ''நிகழ்ச்சித் திட்டத்தின்'' பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன், நிலைபேறான அபிவிருத்தி திட்டமுறை செயல் நடவடிக்கைத் திட்டம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்தல் மற்றும் தரவுகளை களஞ்சியப்படுத்தல் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்கும் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உலகலாவிய இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளது. எங்கள் வரிசை அமைச்சின் மூலம் குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன என அறிவிக்கப்படுவதுடன், நிலவும் கொரோனா தொற்றுநோய் நிலைமை மீது இந்த நிகழ்ச்சித் திட்டம் இதுவரை நடாத்த முடியாமல் போனது. | நிலைபேறான அபிவிருத்திற்கு உரிய கருமங்களை நிறைவேற்ற வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 460 எனினும், உள்ளவாறான பதவியணி 343 ஆக இருந்தமையால் பதவியணி வெற்றிடங்கள் 117 காணப்பட்டன. மிகை ஊழியர் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த இலங்கை விஞ்ஞான சேவையின் வளிமண்டளவியல் உத்தியோகத்தர்கள் 03 பேர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், மேலும், திணைக்களத்திற்காக மனிதவள திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | வழக்குத் தீர்ப்பொன்றின் படி வளிமண்டளவியல் விஞ்ஞானிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.<br>வளிமண்டலவியல் அவதானிப்பு/ தொடர்பாடல் பதவிக்காக 2021 மே 07 அளவில் புதிதாக 27 பேர் சேர்க்கப்பட்டனர். அடுத்த இரண்டு வருடங்களின் வெற்றிடங்கள் தொடர்பாக மொத்தமாக கணித்து பரீட்சைகள் நடாத்துவதன் மூலம் இவ்வெற்றிடங்களை நிரப்புதல் தீவிரப்படுத்தலாம். | சேவையின் தேவையை கவனத்தில் எடுத்து திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2013 ஆண்டு முதல் 2019 ஜுலை 01 வரை வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்பும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |